## திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் - 2014

திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 01 இன் பிரகாரம் வருமானம் மற்றும் செலவின உருப்படிகள் ஒன்றுக்கொள்று எதிரீடு செய்யப்படாமல் வேறு வேறாகக் காட்டப்படல் வேண்டும். எனினும், 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் முதிர்வுற்ற வைப்புக்களுக்காக ரூபா 3,973,154 மற்றும் முதிர்வடையாத வைப்புக்களுக்காக ரூபா 1,075,330 என்ற வகையில் வங்கியினால் குறைக்கப்பட்ட நூற்றுக்கு 8 வீதமான நிறுத்தி வைக்கப்பட்ட வரியின் கூட்டுத்தொகை ரூபா 5,048,484 ஆனது செலவின் கீழ் வேறுபடுத்திக் காட்டாது, வரி குறைக்கப்பட்ட பின்னரான தேறிய வைப்புக்களுக்கான வட்டி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் அறிவுறுத்தல்களுக்கு முரணாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகளின் பெறுமதி ரூபா 26,575,357 ஆக இருந்ததுடன் அது ரூபா 39,639,480 ஆக ரூபா 13,064,123 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) பணமாகப் பெறப்பட்ட வருமானத்திற்காக அட்டுறு அடிப்படையில் நிதிச் செயலாற்றல் கூற்றுக்களில் சீராக்கப்பட்ட ரூபா 177,497,070 ஆன லொத்தர் பங்களிப்பு பண வருமானம் மற்றும் ரூபா 48,996,169 ஆன வைப்பு வட்டி வருமானம் காசு உட்பாய்ச்சலாகவும் அன்பளிப்புக்களுக்கான ஒதுக்கங்கள் ரூபா 180,000,000 மற்றும் கணனிகளுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 208,897 ஆன தொகை காசு வெளிப்பாய்ச்சலாகவும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது.

(iii) நிதியத்தின் நிதிச் செயலாற்றலின் கீழ் காசுப் பாய்ச்சல் உருவாக்கப்படாத போதிலும், அன்பளிப்புக்களுக்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடு, கணனி பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மற்றும் திரட்டப்பட்ட நிதியத்திற்கான சீராக்கங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையான ரூபா 180,173,197 ஆன தொகை காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.3(ஆ) பந்தியின் பிரகாரம் நிதியம் சட்டரீதியாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதிவிளைவு ரூபா 45,622,092 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 33,440,323 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 12,181,769 ஆன முன்னேற்றத்தை காட்டுகின்றது. வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 3,015,090 ஆல் அதிகரித்தமை மற்றும் செலவுகள் ரூபா 9,239,509 ஆல் குறைவடைந்தமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் பிரமாணம் இல.17 இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் விபரக் கொத்துக்களை நாளதுவரையாக்கப்படும் வகையில் சீட்டிழுப்பு செயற்படுத்தப்பட வேண்டுமாயினும், 2012, 2013 மற்றும் 2014 ஆம் வருடங்களில் மாதாந்தச் சீட்டிழுப்புக்கள் அவ்வாறு செயற்படுத்தப்படவில்லை என்பதுடன் 2012 மற்றும் 2013 ஆம் வருடங்களுக்காக 2014 நவம்பர் மாதத்திலும் 2014 ஆம் வருடத்திற்காக 2016 சனவரி மாதத்திலும் சீட்டிழுப்புக்கள் நடைபெற்றிருந்தன. கணனி விபரக் கொத்து நாளதுவரையாக்கப்படாத காரணத்தால் 2012 இலிருந்து 2014 ஆக காலப்பகுதியில் நன்மைகள் கிடைக்கப்பெறாத 81 குடும்பங்களிற்கான சீட்டிழுப்புத் தொகையான ரூபா 12,150,000 உள்ளடங்கலாகப் பல்வேறு காரணங்களால் அக்காலப்பகுதிக்குள்ளான சீட்டிழுப்பிற்கான நன்மைகள் 191 பேருக்குரிய வெற்றிப்பணம் ரூபா 28,650,000 தொகையானது பரிசளிப்பதற்கு முடியாமல் போயிற்று.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் நிதியத்தின் பணத் தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக ரூபா 3,061,151 இலிருந்து ரூபா 36,356,373 இற்கிடையிலான வீச்சில் பண நிலுவை பேணப்பட்டமை காரணத்தால் அப்பணம் வைப்புக்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருமானம் உழைத்தல் இழக்கப்பட்டிருந்தது. மேலும், நிதித் தேவைப்பாடு மற்றும் வட்டி வருமானம் உழைத்தல் போன்ற இரு நோக்கங்களையும் அடையக்கூடிய விதத்தில் வைப்புச் செய்ய வேண்டிய காலப்பகுதியைத் தீர்மானிக்காது 2014 திசெம்பர் 31 இல் ரூபா 736,408,715 பெறுமதியான சகல வைப்புக்களும் 6 மாத காலப்பகுதியில் முதிர்வடையும் குறுகிய கால நிலையான வைப்புக்களில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தின் செயற்பாடுகளுக்காக முழுநேரம் ஈடுபடுத்தப்பட்ட பதவியணியினரின் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், அச்செலவுகளை மீள் நிரப்புவதற்கான முறைமை ஒன்று தயாரித்தல் மற்றும் அரசிற்கு மீள் நிரப்புதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(இ) நிதியத்தின் பிரமாணங்களின் பிரகாரம் அனைத்து நடவடிக்கைகளும் வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் நம்பிக்கை நிதியச் சபையினால் செயற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 சனவரி தொடக்கம் 2015 ஒக்டோபர் 31 வரையிலான காலப்பகுதிக்குள் நம்பிக்கை நிதியச் சபை ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 4 வருட காலத்திற்கு பின்னர் 2019 பெப்ரவரி 07 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் நிதியத்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், நிதியம் சட்டரீதியாக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுவதுடன் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை முறையான வகையில் பேணுவதுடன் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான விசேட அவதானம் வேண்டப்படுகின்றது.